ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமந்நிகமாந்தமஹாதேஶிகன் அருளிய

# ப்ரபந்தசாரம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ப்ரபந்தசாரம்

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்ற ச்சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேற ப்போமளவும் வாழ்வு

ஆரண நான்கின் பொருளை ஆழ்வார்கள் ஆய்ந்தடைவே ⋆
அன்புடனே அம் புவியோர் அனைவரும் ஈடேற என்று ⋆
நாரணனார் தாள்களிலே நாலாயிரம் தமிழால் ⋆
நண்ணி உரை செய்தவற்றை நாடி வகை தொகை செய்தாய் ⋆
பூரண மா ஞானியர் சேர் பொங்கு புகழ்த் தூப்புல் வரும் ⋆
புனிதன் என்றும் பிள்ளை என்றும் புவியோர் புகழ் வேங்கடவா ⋆
தாரணியோர் இங்குகக்கச் சாற்றிய நல் ப்ரபந்தசாரம் தனை
உரைத்து ⋆ வாழு மனம் தந்தருளாய் என்றனக்கே

sundar kidambi
prapatti dot com

ஆதி மறை ஓதி மகிழ் அயக்கிரிவர் தம் அருளால் ⋆
அன்புடனே தூப்புல் நகர் அவதரித்திங்கு வந்த ⋆
வாதியரை வென்றுவந்து வன் புவிமேல் எதிராசர் ⋆
வாழ்வுறு நல் தரிசனத்தை வண்மையுடனே வளர்த்து ⋆
நீதி நெறி தவறாமல் நிறுத்தியிடும் வேங்கடவா ⋆
நேசம் உடன் ஆழ்வார்கள் நிலைகளை எல்லாம் உணர்ந்து ⋆
சாது சனம் வாழவென்று சாற்றிய நல் ப்ரபந்தசாரம் தனை
உரைத்து ⋆ வாழு மனம் தந்தருளாய் என்றனக்கே

‡ ஆழ்வார்கள் அவதரித்த நாள் ஊர் திங்கள் ⋆
அடைவு திருநாமங்கள் அவர் தாம் செய்த ⋆
வாழ்வான திருமொழிகள் அவற்றுள் பாட்டின் ⋆
வகையான தொகை இலக்கம் மற்றும் எல்லாம் ⋆⋆
வீழ்வாக மேதினி மேல் விளங்க நாளும் ⋆
விரித்துரைக்கும் கருத்துடனே மிக்கோர் தங்கள் ⋆
நீள் பாதம் நிரந்தரமும் தொழுது வாழ்த்தும் ⋆
நேசம் உடன் அடியேன் தன் நெஞ்சு தானே ‖ **1** ‖

அருள் மிகுத்ததொரு வடிவாய்க் கச்சி தன்னில் ⋆
ஐப்பசி மாதத் திருவோணத்து நாளில் ⋆
பொருள் மிகுத்த மறை விளங்கப் புவியோர் உய்யப் ⋆
பொய்கை தனில் வந்துதித்த புனிதா ! முன்னாள் ⋆⋆
இருள் அதனில் தண் கோவல் இடைகழிச் சென்று ⋆
இருவர் உடன் நிற்கவும் மால் இடை நெருக்கத் ⋆
திரு விளக்காம் எனும் வையந்தகளி நூறும் ⋆
செழும் பொருளா எனக்கருள் செய் திருந்த நீயே ‖ **2** ‖

கடன்மல்லைக் காவலனே ! பூதவேந்தே ⋆
காசினி மேல் ஐப்பசியில் அவிட்ட நாள் வந்து ⋆
இடர் கடியும் தண் கோவல் இடைகழிச் சென்று ⋆
இணை இல்லா மூவருமாய் இசைந்தே நிற்க ⋆⋆
நடுவில் இவர் ஒருவரும் என்றறியாவண்ணம் ⋆
நள்ளிருளில் மால் நெருக்க நந்தா ஞானச்சுடர் விளக்கேற்றிய ⋆
அன்பே தகளியான தொடை நூறும் ⋆
எனக்கருள் செய் துலங்க நீயே ‖ **3** ‖

மா மயிலைப் பதியதனில் துலா மாதத்தில் ⋆
வரும் சதயத்தவதரித்துக் கோவலூரில் ⋆
தூ முனிவர் இருவருடன் துலங்க நின்று ⋆
துன்னிய பேர் இருள் நீங்கச் சோதி தோன்ற ⋆⋆
சேமம் உடன் நெடுமாலைக் காணப்புக்குத் ⋆
திருக்கண்டேன் என உரைத்த தேவே ⋆
உன் தன் பா மருவு தமிழ் மாலை நூறு பாட்டும் ⋆
பழவடியேனுக்கருள் செய் பரம நீயே ‖ **4** ‖

தைம் மகத்தில் வரும் மழிசைப்பரனே ! ⋆
மற்றைச் சமயங்கள் பல தெரிந்து ⋆
மாயோன் அல்லால் தெய்வம் மற்றில்லை என உரைத்த ⋆
வேதச் செழும் பொருள் நான்முகன் தொண்ணூற்றாறு பாட்டும் ⋆⋆
மெய் மிகுத்த திருச்சந்தவிருத்தப் பாடல் ⋆
விளங்கிய நூற்றிருபதும் தப்பாமல் ⋆
மெய்யே வையகத்தில் மறவாமல் உரைத்து வாழும் வகை ⋆
அடியேனுக்கருள் செய் மகிழ்ந்து நீயே ‖ **5** ‖

‡ முன் உரைத்த திருவிருத்தம் நூறு பாட்டும் ⋆
முறையில் வரும் ஆசிரியம் ஏழு பாட்டும் ⋆
மன்னிய நற்பொருள் பெரிய திருவந்தாதி ⋆
மறவாத படி எண்பத்தேழு பாட்டும் ⋆⋆
பின் உரைத்ததோர் திருவாய்மொழி ⋆
எப்போதும் பிழை அற ஆயிரத்தொரு நூற்றிரண்டு பாட்டும் ⋆
இந்நிலத்தில் வைகாசி விசாகம் தன்னில் ⋆
எழில் குருகை வரு மாறா ! இரங்கு நீயே ‖ **6** ‖

sunder kidambi prapatti dot com

தேறிய மா ஞானம் உடன் திருக்கோளூரில் ⋆
சித்திரையில் சித்திரைநாள் வந்து தோன்றி ⋆
ஆறிய நல் அன்புடனே குருகூர் நம்பிக்கு ⋆
அனவரதம் அந்தரங்க அடிமை செய்து ⋆⋆
மாறனை அல்லால் என்று மறந்தும் ⋆
தேவு மற்றறியேன் எனும் மதுர கவியே ⋆
நீ முன் கூறிய கண்ணிநுண் சிறுத்தாம்பதனில் பாட்டுக் ⋆
குலவு பதினொன்றும் எனக்குதவு நீயே ‖ **7** ‖

பொன் புரையும் வேல் குலசேகரனே ! ⋆
மாசிப் புனர்பூசத்தெழில் வஞ்சிக் களத்துத் தோன்றி ⋆
அன்புடனே நம் பெருமாள் செம் பொற்கோயில் ⋆
அனைத்துலகின் பெரு வாழ்வும் அடியார் தங்கள் ⋆⋆
இன்ப மிகு பெருங்குழுவும் காண ⋆
மண்மேல் இருள் இரிய என்றெடுத்த இசையில் சொன்ன ⋆
நன் பொருள் சேர் திருமொழி நூற்றைந்து பாட்டும் ⋆
நன்றாக எனக்கருள் செய் நல்கி நீயே ‖ **8** ‖

sunder kidambi prapatti dot com

பேர் அணிந்த வில்லிபுத்தூர் ஆனி தன்னில் ⋆
பெருஞ்சோதி தனில் தோன்றும் பெருமானே ! ⋆
முன் சீர் அணிந்த பாண்டியன் தன் நெஞ்சு தன்னில் ⋆
தியக்கற மால் பரத்துவத்தைத் திறமாச் செப்பி ⋆⋆
வாரண மேல் மதுரை வலம் வரவே ⋆
வானில் மால் கருட வாகனனாய்த் தோன்ற வாழ்த்தும் ⋆
ஏரணி பல்லாண்டு முதல் பாட்டு ⋆
நானூற்று எழுபத்தொன்றிரண்டும் எனக்குதவு நீயே ‖ **9** ‖

‡ வேயர் புகழ் வில்லிபுத்தூர் ஆடிப்பூரம் ⋆
மேன்மேலும் மிக விளங்க விட்டுசித்தன் ⋆
தூய திருமகளாய் வந்தரங்கனார்க்குத் ⋆
துழாய் மாலை முடிசூடிக் கொடுத்த மாதே ⋆⋆
நேயம் உடன் திருப்பாவைப் பாட்டாறைந்தும் ⋆
நீ உரைத்த தையொரு திங்கள் பாமாலை ⋆
ஆய புகழ் நூறுடன் நாற்பத்து மூன்றும் ⋆
அன்புடனே அடியேனுக்கருள் செய் நீயே ॥ **10** ॥

மன்னு மதிள் திருமண்டங்குடி தான் வாழ ⋆
மார்கழி மாதக் கேட்டை நாளில் வந்து ⋆
துன்னு புகழ்த் தொண்டரடிப்பொடியே ! ⋆
நீ முன் துழாய் மாலை பணி அடிமை செய்து நாளும் ⋆⋆
தென்னரங்க மணவாளற்கன்பு மிக்குச் செப்பிய ⋆
நல் திருமாலை நாற்பத்தைந்தும் ⋆
பன்னிய நல் திருப்பள்ளியெழுச்சி பத்தும் ⋆
பழவடியேனுக்கருள் செய் பரிந்து நீயே ॥ **11** ॥

sunderkidambi
prapatti.blogspot.com

உலகறிய மலி புகழ்க் கார்த்திகை மாதத்தில் ⋆
உரோகிணி நாள் உறந்தை வளம் பதியில் தோன்றித் ⋆
தலம் அளந்த தென் அரங்கர் பால் ⋆
உலோக சாரங்க மாமுனி தோள் தனிலே வந்து ⋆⋆
பல மறையின் பொருளால் பாண் பெருமாளே ! ⋆
நீ பாதாதி கேசமதாய்ப் பாடித் தந்த ⋆
சொலவமலனாதிபிரான் பத்துப் பாட்டும் ⋆
சோராமல் எனக்கருள் செய் துலங்க நீயே ॥ **12** ॥

‡ அறிவு தரும் பெரிய திருமொழி தப்பாமல் ⋆
ஆயிரத்தோடெண்பத்துநாலு பாட்டும் ⋆
குறியதொரு தாண்டகம் நாலைந்து ⋆
ஆறைந்தும் குலா நெடுந்தாண்டகம் எழுகூற்றிருக்கை ஒன்றும் ⋆⋆
சிறிய மடல் பாட்டு முப்பத்தெட்டிரண்டும் ⋆
சீர் பெரிய மடல் தனில் பாட்டெழுபத்தெட்டும் ⋆
இறையவனே ! கார்த்திகையில் கார்த்திகை நாள் ⋆
எழில் குரையல் வரு கலியா இரங்கு நீயே ‖ **13** ‖

‡ தேசம் எலாம் உகந்திடவே பெரும்பூதூரில் ⋆
சித்திரையில் ஆதிரைநாள் வந்து தோன்றி ⋆
காசினிமேல் வாதியரை வென்று ⋆
அரங்கர் கதியாக வாழ்ந்தருளும் எதிராசா ! ⋆⋆
முன் பூசுரர் கோன் திருவரங்கத்தமுதனார் ⋆
உன் பொன் அடிமேல் அந்தாதியாகப் போற்றிப் பேசிய ⋆
நற்கலித்துறை நூற்றெட்டுப் பாட்டும் ⋆
பிழை அறவே எனக்கருள் செய் பேணி நீயே ‖ **14** ‖

sunderkidambi prapatti dot com

எண்ணின் முதல் ஆழ்வார்கள் மூன்று நூறும் ⋆
எழில் மழிசைப்பிரான் இரு நூற்றொரு பத்தாறும் ⋆
உண்மைமிகு மாறன் மறை ஆயிரத்தோடுற்ற ⋆
இரு நூற்றுத் தொண்ணூறுமாறும் ⋆⋆
வண்மையுடை மதுர கவி பத்தும் ஒன்றும் ⋆
வஞ்சியர் கோன் நூற்றைந்தும் ⋆
பட்டநாதன் பண்ணியல் நானூற்றேழு பத்து மூன்றும் ⋆
பார்க்கோதை நூற்றேழு பத்து மூன்றே ‖ **15** ‖

பத்தரடிப்பொடி பாடல் ஐம்பத்தைந்தும் ⋆
பாணர் புகழ் பத்துடனே பரகாலன் சொல் ⋆
அத்தன் உயர் வேங்கடமாற்காயிரத்தோடான ⋆
இரு நூற்றோர் ஐம்பத்து மூன்றும் ⋆⋆
முத்தி தரும் எதிராசர் பொன் அடிக்கே மொழிந்த ⋆
அமுதர் பாடல் நூறும் எட்டும் ⋆
எத்திசையும் வாழ இவர் பாடி வைத்த இவை ⋆
நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே ‖ **16** ‖

‡ வையகம் எண் பொய்கை பூதம் பேயாழ்வார் ⋆
மழிசையர்கோன் மகிழ் மாறன் மதுர கவி ⋆
பொய்யில் புகழ்க் கோழியர்கோன் விட்டுசித்தன் ⋆
பூங்கோதை தொண்டரடிப்பொடி பாணாழ்வார் ⋆⋆
ஐயன் அருள் கலியன் எதிராசர் தம்மோடு ⋆
ஆற் இருவர் ஓர் ஒருவர் அவர் தாம் செய்த ⋆
துய்ய தமிழ் இருபத்து நான்கின் பாட்டின் தொகை ⋆
நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே ‖ **17** ‖

‡ அந்தமிலா ஆரணங்கள் நாலாகி நின்ற ⋆
அதன் கருத்தை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்து ⋆
செந் தமிழால் அருள் செய்த வகை தொகையும் ⋆
சிந்தாமல் உலகங்கள் வாழவென்று ⋆⋆
சந்த மிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் ⋆
வேதாந்தகுரு மொழிந்த ப்ரபந்தசாரம் ⋆
சிந்தையினால் அனு தினமும் சிந்திப்போர்க்குச் ⋆
சேமமதாம் திருமால் தன் கருணை யாலே ‖ **18** ‖

sunder kidambi prapatti dot com

அடிவரவு — ஆழ்வார் அருள்கடல் மாமயிலை தை முன் தேறிய பொன் பேரணி வேயர் மன்னு உலகரிய அறிவுதரும் தேசமெல்லாம் எண்ணில் பத்தரடி வையகம் அந்தமிலா ஆகாரம்

ப்ரபந்தசாரம் முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

sunder kidāmbi
prapatti dot com